**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.273/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நடேசன் | Prosecution | PW-3 Cross |
| Father Name | ராஜமாணிக்கம் | Defence | |
| Village | வனக்காப்பாளர் சீர்காழி | Taluk | சீர்காழீ |
| District | மயிலாடுதுறை | Age | 57/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>10.11.2025. எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 30.09.2016 ம் தேதி நான் எங்கிருந்து வந்தேன் என்றால் நான் எனது ஓலையாம்புத்தூரில் இருந்து வன அலுவலகத்திற்கு நானும் வரும் வழியில் பன்னீர் செல்வம் என்பவரும் சேர்ந்து வந்தோம். எதிரியை எங்கு பார்த்தோம் என்றால் அலுவலகம் போகும் வழியில் ஆஜர் எதிரி விவேகானந்தா பள்ளி உரிமையாளர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். எதிரியின் பையில் இரண்டு வாத்து இருந்தது அதனை பார்த்து அவரை அழைத்து கொண்டு அலுவலகத்தில் ஒப்படைத்தோம் என்றால் சரிதான். அதன் பிறகு எனக்கு அந்த வாத்துகளை பற்றிய விபரம் தெரியுமா என்றால் வேறு எதுவும் தெரியாது அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டுக்கொடுத்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.273/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | செல்வம் | Prosecution | PW-4 Cross |
| Father Name | ஜெயராமன் | Defence | |
| Village | வனவர், சீர்காழி | Taluk | சீர்காழீ |
| District | மயிலாடுதுறை | Age | 47/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>10.11.2025. எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 30.09.2016 ம் தேதி எத்தனை மணிக்கு எனது அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் 10.15 மணிக்கு சென்றேன். எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் சீர்காழி டவுனில் வசித்து வருகிறேன். என்னுடன் வேறு யாரேனும் உடன் வந்தார்களா என்றால் இல்லை. நான் எப்போது வனசரக அலுகலகத்திற்கு பணியில் இருக்க வேண்டும் என்றால் 10.00 முதல் 10.30 க்குள் வந்துவிட வேண்டும். நான் தினமும் விவேகானந்தா பள்ளியின் உரிமையாளர் வீட்டு வழியாகத்தான் செல்வேன் என்றால் சரிதான். மேற்படி தேதியில் நான் பணிக்கு செல்லும் போது எதிரி அங்கு இல்லை. நான் எதிரியை எங்கு எப்போது பார்த்தேன் என்றால் நான் அலுவலகத்தற்கு 10.15 மணியளவில் செல்லும் போது எதிரி அங்கு இருந்தார்.

எதிரியிடம் நான் ஏதேனும் விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி எதிரியை வனதுறை அலுவலர்கள் விசாரித்த விபரம் எனக்கு தெரியும். புள்ளிமூக்கு வாத்து என்பது நன்னீரில் வாழக்கூடியது மேலும் நீண்ட துாரம் பறக்க கூடியதா என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. எனது உயரதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் பறவையை பறக்க விட சொன்னார்கள் எங்கு பறக்கவிட சொன்னார்கள் என்று தெரியாது. ஆஜர் எதிரி எனது வனவரிடம் வாக்குமூலம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தான்

மேல்விசாரணை செய்யப்படுகிறது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் சொல்லப்படக்கூடிய விவேகானந்தா பள்ளி உரிமையாளரையோ அல்லது பறவை கொடுத்த பாபு என்பரையோ விசாரித்தார்களா என்றால் விசாரிப்பதாக சொன்னார்கள். இறந்த பறவையினை பிரேத பரிசோதனை செய்யப்போவதாக சொன்னார்கள் நான் செல்லவில்லை பன்னீர்செல்வம் என்பவர் சென்றார் என்றால் சரிதான். நான் போகவே இல்லை வனக்காப்பாளர் பன்னீர்செல்வம் மட்டுமே சென்றார் என்றால் சரிதான். சரியாக விசாரணை செய்யாமல் எனது உ யரதிகாரிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.273/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பாலசுப்பிரமணியன் | Prosecution | PW2- Cross |
| Father Name | மாரி | Defence | |
| Village | Forest range officer, மேகமலை | Taluk | ஆண்டிப்பட்டி |
| District | தேனி | Age | 56/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**10.11.2025. எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எதிரியை கைது செய்யும் போது சீர்காழி வனசரகத்தில் என்ன பொருப்பில் இருந்தேன் என்றால் வனவராக இருந்தேன். எனக்கு கீழ் வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் என்றால் சரிதான். என்னுடன் 30.09.2016 ம் தேதி அன்று என்னுடன் யார் உடனிருந்தார் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். அலுவலகத்தில் வேறு யாரும் இல்லை. அன்றை பணியின் போது மற்ற வனக்காப்பாளர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் வழக்கம் போல் 10.00 மணிக்கு வந்தார்கள். எனக்கு இரவு நேர ரோந்து பணி உண்டா என்றால் உண்டு. எதிரியை யார் அழைத்து வந்தார்கள் என்றால் பன்னீர்செல்வம் வனக்காப்பாளர், செல்வம் வனக்காவலர் ஆகியோர் காலை 10.10 மணிக்கு அழைத்து வந்தார்கள்.

தடை செய்யப்பட்ட பறவைகள் என்ன என்றால் புள்ளிமூக்கு வாத்து உள்ளது. அந்த புள்ளி மூக்கு வாத்தின் புகைப்படங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்றால் ஒப்படைத்திருப்பார்கள். எதிரி ஒப்புதல் வாக்கமூலத்தில் விவேகானந்தா பள்ளி உரிமையாளர் வீட்டில் ஒப்படைக்க வந்தேன் என்று கூறியநிலையில் அந்த பள்ளியின் உரிமையாளரை விசாரிக்க வில்லை என்றால் சரிதான். அது போல புள்ளி மூக்கு வாத்தினை

கொடுத்தனுப்பிய பாபு என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. எனது வனக்காப்பாளர் அலுவலகத்திற்கு வரும் போது சாக்கு பையில் ஒரு புள்ளி மூக்கு வாத்து இறந்த நிலையில் இருந்தது பற்றி கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது விசாரணையில் இந்த புள்ளி மூக்கு வாத்தினை எங்கு எங்கு பார்த்துள்ளேன் என்றால் சீசன் காலத்தில் நீர் நிலைகளில் காணப்படும். சீசன் என்பது மழைகாலம் என்றால் சரிதான். 30.09.2016 என்பது குளிர்காலம் ஆரமித்துள்ளதா என்றால் மழைகாலம் ஆரமித்த காலம் ஆகும்.

நான் சீர்காழி கால்நடை மருத்துவரிடம் புள்ளிமூக்கு வாத்தினை 01.10.2016 ம் தேதி காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஒரு நாள் கால தாமதமாக காட்டினேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அந்த புள்ளி மூக்கு வாத்து இறந்தது பற்றிய அறிக்கை பெற்று அந்த அறிக்கையினை சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வனவர் என்ற முறையில் வனக்காப்பாளர் கைது செய்த இடம் மற்றும் அங்குள்வர்களை விசாரித்தேனா என்றால் இல்லை. அது போல முத்துக்குமாரிடம் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரி கைது செய்யப்பட்ட இடத்தில் குறிப்பாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள இரண்டு நபர்களிடம் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் வனவர் என்ற முறையில் அந்த புள்ளி மூக்கு வாத்தின் நீளம், எடை, பற்றி என்னால் கூற முடியுமா என்றால் தெரியாது. அது புள்ளி மூக்கு வாத்து என்பதை எதன் அடிப்படையில் கூறினேன் என்றால் என் அனுபவத்தின் அடிப்படையில் கூறினேன். அந்த புள்ளி மூக்கு வாத்து எந்த நாட்டினை சேர்ந்தது என்றால் அது ஞாபகம் இல்லை. அதன் பிறப்பிடம் இந்தியா இல்லை என்றால் சரிதான். அந்த புள்ளி மூக்கு வாத்து என்பது கடுமையான குளிர் பிரேதசத்தில் வாழக்கூடிய பறவை இனம் குறிப்பாக தமிழ் நாட்டில் வாழக்கூடியது இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரியை கைது செய்யும் போது எதிரியிடம் புள்ளிமூக்கு வாத்து உள்ள புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல.

தமிழகத்தின் தேசிய பறவை என்ன என்றால் மரகத புறா என்பதாகும். தமிழகத்தில் பட்டியலில் உள்ள 500 பறவையினத்தை எதிரி எந்த வித

தொந்தரவும் செய்யவில்லை என்று எதிரி கூறுகிறார் என்றால் சரியல்ல. எதிரி குரவர் இனம் என்பதால் தாங்கள் மாதாந்திர வழக்கு பதிவு செய்வதற்கு எதிரி மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குரவர் இனம் வேட்டையாடி பிழைப்பதற்காக இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது என்றால் இல்லை. எதிரியை சரிவர விசாரிக்காமலும் எதிரி குரவர் இனம் என்பதால் அவரை அடித்து மிரட்டி, பொய்யாக வாக்குமூலம் பெற்று எதிரி மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**